# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 390/2025 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | மாரிமுத்து (**சிறப்பு உதவி ஆய்வாளர்**) |
| Father's / Husband Name | : | **ராமசாமி** |
| Address | : | **வி.களத்தூர் காவல் நிலையம்** |
| Age | : | 57/2026 |

**தேதி : 04/03/2026**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.ஆ. சத்தியபாமா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது. **எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் வி.களத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 22.02.2025ம் தேதி அன்று பெரம்பலூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது நான் மற்றும் முதல்நிலை காவலர் மணிகண்டன் மற்றும் தமிழரசன் முதல்நிலை காவலர் ஆகியோர்களுடன் சென்று மது சம்மந்தமாக பழைய பேருந்து நிலையம் கடைவீதி ஆகிய பகுதிகளில் ரெய்டு சென்றுக்கொண்டிருந்போது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி ஆத்தூர் ரோட்டில் உள்ள டாஸ்மாக் கடையில் காலை 14.10 மணிக்கு சோதனை செய்தபோது ஒரு நபர் எங்களை கண்டதும் தப்பிக்க முயற்சிசெய்தார். அவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக கூறி அவருடைய பெயர் முரளி என்று கூறினார். அவர் ஆஜர் எதிரிதான். அவர் ்கையில் வைத்திருந்த பையை வாங்கி உதவி ஆய்வாளர் சோதனை செய்தபோது அந்த பையில் 180 m.l. அளவுள்ள Monitary பிராந்தி பாட்டில்கள் 10 இருந்தது.

அரசு மதுபான கடை மூடிய பிறகு அதிக விலைக்கு விற்பதற்காக வாங்கி வைத்திருந்ததாக சொன்னார். பின்பு 14.10 மணிக்கு எதிரியை கைது செய்து 14.15 மணிக்கு எதிரியின் உறவினருக்கு கைது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டது. பொதுமக்கள் யாரும் முன்வராததால் எங்களுடன் வந்த தலைமை காவலர்கள் மணிகண்டன் மற்றும் தமிழரசன் ஆகியோர் முன்னிலையில் எதிரியிடமிருந்து மது பாட்டில்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசரை உதவி ஆய்வாளர் தயார் செய்தார். அதன்பிறகு 14.15 மணிக்கு மதுபாட்டில்களை திறந்து சம்பவ இடத்திலேயே மதுவை கீழே கொட்டி அழித்து அழித்தல் மகசரை தயார் செய்தேன். பின்பு எதிரியை 14.30 மணிக்கு காவல் நிலையம் அழைத்துவந்து காவல் நிலைய குற்ற எண். 112/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024ன்படி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை திரேக பரிசோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்தேன். பின்னர் இவ்வழக்கில் இறுதி விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக அதே சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடம் காவல் நிலையத்திலிருந்து அரை கி.மீ. தூரம் என்றால் சரிதான். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட 10 மதுபாட்டில்கள் எந்த கடையில் வாங்கினார் என்று விசாரித்தேனா என்றால் இல்லை. எந்த இடத்தில் மதுபாட்டில்களை வைத்திருந்தார் என்று வரைபடமோ, மகசரோ தயார் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் எத்தனை மணிக்கு கைப்பற்றினேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரி யாரிடம் மதுவை விற்றார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரின் மதிப்பு 0 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மதுபானங்களை கொட்டி அழித்துவிட்டதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அந்த காலி பாட்டில்களை நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நாளிலேயே இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் புள்ளி விவரத்திற்காக எதிரியின் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.